வெளியீடு இல 33

ஆக்கியோன்
கவி. கா. கனகசபை

# துரோபதை அம்மானை

தொகுப்பாசிரியர்
க. தா. செல்வராசகோபால்

# பதிப்பகத்தாருரை

33 வது வெளியீடாக, களுவாஞ்சிகுடி கவி.கா.கனகசபை அவர்களின் துரோபதை அம்மானையை வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம். ஏட்டுருவில் இருப்பதுமிதுவரை அச்சிடப்படாததுமான நூல்களை வெளியிடுவதே எங்கள் நோக்கம். இதுவரை இந்த நோக்கத்தை நாங்கள் நிறைவேற்றி வருகிறோம் என்பதை எங்கள் வெளியீடுகள் நிரூபிக்கும்.

சொல்லளவில் வீரராக இருப்பதை அல்ல செயலளவில் வீரராக இருப்பதையே விரும்பும் நாங்கள் எங்கள் முயற்சிகளும் அவ்வாறே இருப்பதனையே விரும்புகிறோம் தமிழ்! தமிழ்! என்று ஓலமிடுவதில் பயனில்லை தமிழ் நூல்களை ஆதரிப்பதிலும் ஆக்குவதிலும் பேணுவதிலும் தமிழின் இனிமையை கலைவளத்தை பிறமொழியினருக்கு எடுத்துய்க்க வைப்பதிலும் தமிழ் வளரும்.

மற்று; தமிழ் காப்பேன் என்று தன் வயிறு காக்க முன்வருபரும் அரசோம்புவோரும் காக்குந்தமிழ் ஆற்றங்கரையில் மரமே. ஆதலின் தமிழ் மக்களே! நீங்களே தமிழின் காவலர்! காக்குநர்!! அதற்கு ஆவன செய்வீர்

உங்களிடம்உள்ள பழைய அச்சேறாத நூல்களை எங்களுக்குத் தாருங்கள் நாங்கள் எங்கள் பங்கைச் செய்கிறோம். நீங்கள் தமிழ் நூல்களை வாங்கி உங்கள் பங்கைச் செய்யுங்கள் எங்கள் பங்கை நாங்கள் சரிவர நிறைவேற்ற வேண்டியது உங்கள் ஒத்துழைப்பு.

நா.சா.கதிர்காமத்தம்பி

பதிப்பகத்தார்.

தேற்றாத்தீவு.
1.8.68.

9

வெளியீடு இல :33

மட்டக்களப்பு — திருப்பழுகாமத்துறையும்

# துரோபதை அம்மானை.



ஆக்கியோன்;

## கவி. கா. கனகசபை,

(களுவாஞ்சிகுடி)

பதிப்பகம்:

ஜீவா பதிப்பகம்.

பிரதான பாதை—தேற்றாத்தீவு

களுவாஞ்சிகுடி' இலங்கை,

# தொகுத்தவர் உரை.

1952ம் ஆண்டளவில் கிராமிய இலங்கியங்களுக்கு இலங்கை வானொலிப் பகுதியும் இலங்கைத் தமிழ்த் தினசரிகளும் உயிரளித்த காலத்தில், மட்டக்களப்பு கிராமிய இலக்கியங்களை வெளிப்படுத்திய பல எழுத்தாளர்கள் ஒருவரை வட்டமிட்டவாறே திரிந்தனர். காரணம் அவரிடம அநேக நாடகங்கள், அம்மானைகள், காவியங்கள் துதிப் பாடல்கள், ஊஞ்சற் கவிதைகள் கவிகள் என்பவற்றின் [தொகுதிகள்] அடங்கியிருந்தமையுடன் அவற்றை இசையுடன் பாடி ஏற்ற பொருத்தமான கருத்துகளைக் கூறி விளக்கும் ஆற்றலிருந்தமையேயாகும். இவரினுல் வானொலிக் கலைஞர்களானோர் அநேகர். எழுத்தாளர்களானேர் எத்தனையோ பேர் பதிப்பாசிரியர்களானோர் பலர்.

கிழக்கு ஈழத்தில் மட்டக்களப்பில் களுவாஞ்சிகுடியில் 1901ம் ஞு வைகாசிமீ 25ந் திகதி முருகப்பர் கார்த்திகேசு எனும் இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய தமிழ் அறிஞருக்கும் வீ.சின்னப்பிள்ளை அம்மையாருக்கும் புதல்வனுகப் பிறந்தார்.

ஆரம்பக் கல்வியை களுவாஞ்சிகுடி மெதடிஸ்த மிசன் தமிழ்ப்பாடசாலையில் கற்ற இவர் தந்தையாரிடம் இலக்கணப் பயிற்சி பெறருர். இலக்கியங்களை ஆராய்ந்து கற்ருர். இதனுல் இலக்கிய ஆர்வமும், இலக்கிய நூல்களைச் சேகரிக்கும் ஆர்வமும்' சேரப் பெற்ருர். இவரை கவி கனகசபை என்று இப் பகுதி மக்கள் செல்லமாக அழைப்பர்.

பல வானொலி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியதுடன் கிருட்டின அம்மானை, தாந்தாமலைப் பேரின்பப் பற்று, முக்கொலை தற்கொலைக் கும்மி, பாண்டிருப்பு துரோபதை அம்மானை, சதாரம் ஊஞ்சல் பாட்டு, முதலிய நூல்களை இயற்றி அச்சு வாகனமேற்றியுள்ளார்

பஞ்ச கன்னியர்களில் ஒருவரான துரோபதையை வணங்கும் வழக்கம் வட இந்தியாவில் இருந்து வருகிறது. இவ் வணக்கம் திராவிட நாட்டிலும் பரவி ஈழத்திலும் இடம் பெற்றுவிட்டது.

பொதுவாக பாரதத்தை தீப்பள்ளயமாகவும் பாகவதத்தை கஞ்சன் கதைப்படிப்பாகவும் கந்தப்புராணத்தைச் சூரன் போராகவும், சிலப்பதிகாரத்தை கண்ணகை அம்மன்சடங்காகவும்

கிரியா ரூபமாகவும். நாடக ரூபமாகவும். கோயில்களில் வழிபட்டு வரும் வரன் முறை மட்டக்களப்பின் முதுசமாகும். உரிய உற்சவ யாலங்களில் இக் காப்பிய நூல்கள் பாடப்பெற்று பயன் கூறுவது டன் பல தினங்களுக்கு சம்பவங்களுக்கு ஏற்ப நிகழ்ச்சிகள் நாடக ரூபத்தில் நடாத்தபபட்டு வழிபடுவதும் வியக்கத் தக்கதொரு பக்தி முறையாகும். இலக்கியத்தையும் இறை வழிபாட்டையும் ஒருங்கே இணைக்கும் இம்முறை இணையற்ற ஓரம்சமாக மட்டக்களப்பு மக்களுடன் இணைந்துள்ளது,

திருப்பழுகாமம், பாண்டிருப்பு' முதலான இடங்களில் பாரதம் படித்து பயன் கூறப்பட்டு உற்சவம் நடைபெறும், கடைசி நாளில் தீப்பள்ளயம் நடைபெறும். பக்தர்கள் கூடி வணங்குவார்கள் இதன் வரன் முறையை துரோபதை அம்மானை எனும் நூலாக களுவாஞ்சிகுடி கவி. கா. கனகசபை அவர்கள் பாடியுள்ளார்.

இலக்கியத்தையும் சமயத்தையும் இணைக்கும்ஒரு நூலாகவிது அமைந்துள்ளது. இயற்கையில் இறைவனைக் கண்ட தமிழர்கள் இலக்கியத்தில் இறைவனைக் காண்பது புதுமையல்ல. வாழ்க்கையின் பிரதிபலிப்பான இலக்கியத்தில் இறைவனின் சக்தியைக் காணும் பெருந் தத்துவம் இணையற்ற தொன்றுகும். இத்தகைய அமைப்பில் அமைந்துள்ள இந்த நூலின் நயம் வாசகர்களின் தனிக்கவனத்துக்குரிய தொன்றுகும். எனவே அதனை வாசகர்களுகே விட்டு விடுகிறேன்.

கண்டியரசின் காலத்தில் உப இராசதானியாக இருந்த பெருமையுடையது பழுகாமம். அவ்வித அந்தஸ்தை இது பெற்ற தென்பதை அருகில் உள்ள காடுகளில் அழிந்த நிலையில் இருக்கும் புரமதான கட்டிடங்கள் எடுத்துக் காட்டும். மட்டக்களப்பு வாவியின் மேற்கில் பட்டிருப்புத் தொகுதியில் பாலும் தேனும் பாயும் இக்கிராமம் தொன்மையானது மட்டக்களப்பில் இருந்து 18 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இங்குள்ள ஆலயங்களுள் துரோபதை ஆலயமும் ஒன்று. இருமருங்கும் கல்வி நிலையங்களையும். முன்னால பரந்த வயல் நிலங்களையும் வாவியையும், பின்னால் கிராமத்தையுமுடையதாக அமைந்த இத் தேவலாயத்தை சிறப்பிக்கும் முயற்சியே இவ் அம்மானை.

— க.தா. செல்வராசகோபால்.

ஓம் பரப்பிரமம் துணை

# துரோபதை அம்மானை.

## கணேசர் காப்பு

ஏர்மருவு பழுகாமத் தினிய துரோபதை மேல்
சீர் பெறவே அம்மானை செப்புதற்கு — வார் சடைமேல்
திங்களொடு கங்கையணி மங்கை லோர் பாகனருள்
துங்கக் கரி முகவன் துணை

## சரஸ்வதி காப்பு

சதுர் முகனின் தேவி சரஸ்பதியே என் நாவில்
முது தமிழில் அம்மானை மொழிந்திடவே — பதுமமுறை
தாயே சர்வகலை தரும் சொற் கலைவாணி
ஆயே உறைந்தருளத் தா.

## — நூல் —

முந்தி விநாயகனே முருகுள்ளான் புத்திரனே
சுந்தருக்கு முன் பிறந்த கணபதியே காப்பாயே 1
நாவிற் சரஸ்வதியே நான் முகனார் தேவியரே
பூவிற் பிறந்தவளே பூலோகரட்சகியே 2
அண்டம் அளந்தவரே ஆதி நாராயணரே
கொண்டல் நிறமுள்ள கோபாலா மாயவரே 3

பாண்டவர் சகாயா பரந்தாமா நான் பாடும்
அம்மானை தனக்குள் அருள்தர வேண்டுகிறேன் 4
பழுகாம நகரில் பத்தினி துரோபதியார்
அம்மனின் ஆலயம் ஒன்றமைக்கவே வேணுமென்று 5
எல்லாரும் கூடி ஏகமனதாய் திரண்டு
கோவில் கட்டும் நிலையம் குறித்தார்கள் ஓர் புறமாய் 6
ஆல் அரசுவேம்பு அத . முன் பாய் நதியும்
தொக்கட்டிமரச்சார்வில் கோவிலைக் கட்டஎன்று 7
சாத்திரத்தின் முறையே சகலரும் சம்மதித்து
கோத்திரம் வழங்க கோவிலைக் கட்டி வைத்தார் 8
கோவிலைக் கட்டி குருவையும் சேர்த்து வைத்து
கொடியேற்றிப் பூசை செய்ய குறித்துமே ஓர் தினத்தை 6
அந்தத்தினத்தில் அபிஷேக பூசை செய்து
துரோபதி அம்மாள் என்று சொல் நாமமும் சூட்டி 10
பஞ்சவர்கள் ஐவரையும் பஞ்சாலி துரோபதையும்
தெய்வமாய்ப் போற்றி தொழுவது வரம் பெறவே 11
நல்ல இடம் பழுகாம நகர் மக்கள் போற்றுதற்கு
அல்லலைத் தீர்க்கும் அரிராமர் தங்கையர்க்கு 12
வருஷம் வருஷம் வரும் ஆடி மாதமதில்
புரணை வெள்ளி வாரம் பூசை செய்து தீப் பாய 13
ஓம குண்டத்தில் ஓதிப் பிராமணனும்
கும்பாகுடம் நிறுத்தி குறித்த அம்மனை இருத்தி 14
பதினெட்டு நாட்சங்கு பராதப்போர் முறையே
நடத்தி வருவதற்கு நல்லகனி பூவெடுத்து 15
அரிசி முதலில் ஆன பழம் தேன் பாலில்
சக்கரையில் பொங்கித் தான் படைத்தார் அம்மானை 15
மல்லிகை முல்லை மருக்கொழுந்து செண்பகமும்
பாரிஜாதம் றோஜா பலவிதப் பூப்பரப்பி 17

கற்பூரம் சாம்பிராணி காம்பரிந்த வெற்றிலையும்
பாக்குப்பழம் தேங்காய் பரப்பியே அம்மனின்முன் 18
கற்பூர ஆலாத்திகாட்டியே அம்மனின் முன்
ஓம்நமோ என்று ஓங்காரத்துள் அடங்கி 19
பூசை முனையில் பூத கணங்களுடன்
வாள் எடுத்து வில்லேந்தி வந்தார்கள் ஐவருமே 20
பூசை முடித்துப் பிரசாதமும் வழங்க
ஆலயத்தின் முன்னில் அரகரா என்றதிர 21
தருமருடன் வீமன் தம்பி அருச்சுனரும்
நகுலர் சகாதேவர் நல்ல கணங்களுடன் 22
கமுகம் பூ வேப்பம் பூ குலை கையில் ஆயுதம் பிடித்து
நிரை நிரையாய் நின்று நெடுமாலைத் தோத்தரித்து 32
ஆடலும் பாடலும் அம்மனின்மேல் காவியமும்
பார்க்க அலங்கார பந்தலும் தோரணமும் 24
கோவில் வலம்வரும்போது கும்மிட்டு போற்றிசெய்து
அரோகரா என்று அலறுவார் அம்மானே 25
விதிப்படி பூசை செய்து விட்டதின் பிற்பாடு
வீபூதி பிரசாதம் வில்வரும் கைகொடுத்து 26
பதினாறும் நாள் புதனில் வனவாசம் போவதற்கு
மாயவரைத்தோத்தரித்து வணங்கியே ஐவருமே 27
பதியை விட்டேகி பத்தினி ஐவருடன்
நல்லகனி பறிக்க நகரின் உள்ளே புகுந்து 28
தருமருடன் வீமன் தம்பி அருச்சுனனும்
நகுலர் சகாதேவன் நாயகியாம் பாஞ்சாலி 29
ஊரில் புகுந்து ஒரு கையில் தண்டேந்தி
கரும்பு முதலான கனிபழங்களைப் பறித்து 30
வாழைக்குலை பாக்கு வருக்கன் பலாக்கனியும்
தேன் மாங்கனி கிழங்கு சேகரித்து வீமனுமே 31

வெட்டிக் குவித்து விளையாடி அவ்வூரில்
போவதைக் கண்டு தொண்டர்போனார் வனவாசம் 32
அறுத்த கனிபழங்கள் எடுத்துச்சுமந்து கொண்டு
இறுத்த இடம் தேடி நாடியே சென்றார்கள் 33
ஐங்கரனை வணங்கி ஆறுமுகனைத் தோத்தரித்து
காளியைப் பணிந்து களையாறி அங்கிருந்து 34
வீமன் புகுந்து வெட்டிய காய்கனியை
எடுத்துச் சுமந்து கொண்டு ஏகினார் அம்மானை 35
கொண்டுவந்து பழுகாமக் கோவிலின் முன்வைத்து
பூசைகண்டு எல்லாரும் போற்றியே மாயவனார் 36
சன்னிதியில் உள்ளிருந்துதனிப்பூஜையைமுடித்து
பாசிபதம் பெறவே பாத்திபன் அருச்சினனும் 37
வேஷம் தரித்து வீபுதி உருத்திராட்சம் அணிந்து
தவசிவடிவாய் தமயனிடத்தில் வந்து 38
மண்டியிட்டுக் கைகூப்பி மனதைத்திடமாக்கி
போக விடைதாரும்மெனப்போற்றித்தருமர்தனை 35
கும்பிடத் தம்பியர்க்கு குருஉபதேசம் கொடுத்து
அஞ்சாதே போய் வா அருச்சுனா என்றளித்தார் 40
அண்ணன் விடைபெற்று அரிராமர்மைத்துனரும்
காவியுடை அணிந்து கையில் வில் அம்பு எடுத்து 41
பாசிபதம் பெறவே பாஞ்சாலி நாயகரும்
கோயில் வலம் வருவதை கூறுவேன் அம்மானை 42
கற்பூர ஆலாத்தி காவடிகள் ஆடிவர
மச்ச அவதாரன் வலம் வருவார் பதம் பெறவே 43
காவடிகள் ஆடிவரக் கன்னியர்கள்பாடிவரக்
கண்டு தனமுனியும் கையில் மயில் தோகையுடன் 44
கோவிலின் முன்னின்று குருவையும் தோத்தரித்து
வலம் வரும் அப்போதேவந்தாளே ஏலகன்னி 45

கண்டாள் தவமுனியை கன்னிபேரண்டியவள்
கட்டித் தழுவி என் காம விடாய்தீருமென்முள் 46
என்னை அணைந்து இன்பசுகம் தராமல்
போகவிடேன் என்று புன்னகை செய்வாள் மாது 47
அருச்சுன குரு அவர் முகம் பார்த்தேது சொல்வார்
தவத்தை அழிக்காதே தாயே நீ தள்ளிநில்லு 48
கும்பம் இரண்டும் குலுங்க நகைநகைத்து
போகாதே நில்லும் புணர்வோம் இவ்வனத்தில் 49
கண்கள் உறங்கினாலும் காதல் உறங்காது
மங்கையைச் சேர்த்து மருவி விளையாடுமென்முள் 50
அருச்சுன குருவோ அரிராமர் மந்திரத்தால்
எறிந்தார். வீபூதி இவள் விலகி ஓடிடவே 51
இங்கு இது நடக்க இளைய சகாதேவன்
சாஸ்த்திரம் பார்த்துத் தமயனிடம்உரைப்பான் 52
அண்ணு மதவீமா அக்கானில் ஓர் அரக்கி
தவத்தைக் குலைக்கத் தான் போருள் என்றலுமே 53
மாயவரைத் தோத்தரித்து மதவீமன் தண்டேந்தி
தருமரைக் கண்டு தான் உணர்த்தினன்செய்திதனை 54
மயங்காதே தம்பிமதவீமா இப்போதே
அருச்சுன குருவுக் அனத்தம் ஒன்றும் வாராது 55
அண்ணன் சொல் தட்டாதவருச்சுனனும் அப்போது
பன்றியொன்று எதிரே பதறிவரக் கண்டாரே 56
கோபித்து வில்லெடுத்து குரு உபதேசம் செய்து
பாணம் விடுவதன்முன் பன்றிமறைந்தோடியதே 57
கண்டு தவமுனியும் காயாம் பூ வண்ணரைத்தான்
தோத்தரித்து நின்று தொழுதார்காண் அம்மானை 58
தவத்துக்குரிய தனித்த இடந்தனிலே
சங்கு சேகண்டி சகலதும் அங்கு வைத்து 59

வில்லம்பு வைத்துவிட்டு விருட்சத்தின் கீழிருந்து
அரனை வணங்கி அணிந்தார் திருநீறு 60
அரகரா வென்று அரனை மனதிலெண்ணி
சிவசிவா வென்று சேகண்டிதான் முழங்க 61
கம்பத்திலேறி கடிய தவமிருந்து
கும்பம் நிறுத்தி கூறினார் சங்குதொனி 62
பாசுபதம் பெறவே பத்தும் பதியும் பாடி
அரோகரா என்று அலறினார் அருச்சுனரும் 63
பாடலும் பாடி பழம் காய் பறித்தெறிந்து
சங்கு சேகண்டி சத்தம் முழங்கிடவே 64
அரனைப் பணிந்து அரிய தவம் செய்குவதை
கண்டேறிவோம் என்று காளையின் மீதேறி 65
வந்து தவசியின்முன் வரமென்ன வேண்டுமென்று
பாசிபதம் பெறவே பணிந்தேன் திருவடியை 66
தவத்தில் மிருந்தரிஷி தந்தேன் நான் சக்கரமும்
போநீ வெற்றிகொள் போர்முனையில் என்றலுமே 67
சக்கரத்தைப் பெற்று தாழ் பணிந்து தெண்டனிட்டு
வில்லம்பு கைபிடித்து விசயன் வழி நடந்தான் 68
பாசிபதம் பெற்று வந்து பழுகாமக் கோவிலில்
தருமனைக் கண்டு தலைவணங்கி தெண்டனிட்டான் 69
தெண்டனிட்ட தம்பிதனை தேற்றி அருகெடுத்து
வெற்றிகொள்வோம் போர் வீமனுடன் ஏகுமென்று 70
பதினேழாம் நாள் இரவு பாசிபத சடங்கு
நடத்தும் முறையை நான் எடுத்துக் கூறுகிறேன் 71
கோவிலின் உள்ளே குவித்திருக்கும் ஆயுதங்கள்
அவரவர் கையெடுத்து அணிவகுத்துப பூஜை முன் 72
போர் செய்யப் போவார் போல் பூத கணங்களுடன்
கண்டு பிரமிக்க காட்டுவார் அம்மானை 73

பச்சை விறகடுக்கிப் பத்தித் தணலானதின் பின்
எங்கும் புகழ் விழங்க எரிகின்ற அக்கினியில் '88
துரோபதி ஐவரின் முன் சொன்ன சொல்லின் படியே
ஆற்றில் குளிக்க கணங்களுடனே யேகி 89
ஆற்றினில் மூழ்கி கரையேறி எல்லாரும்
மஞ்சள் குளித்து வருவார்கள் அம்மானை 90
கூ கூ வென்று கத்திக்கொக்கரித்துப் பேய்க்கூட்டம்
நெரிப்பினில் பரய நெறு நெறென்று பல்கடித்து 91
ஐந்து மணி நேரமதில் அக்கினியில் பாய்ந்தேறி
நெருப்பில் மறந்து நிர்ணயத்தைக் காட்டியே 92
போற்றுவோம் கேளும் புவனம் பதினுலும்
சாற்றுவோம் மக்கள்தழைத் தோங்கிவாழ்வதற்கு 93
சபதம் முடித்து விட்ட சத்தி துரோபதியை
பத்தினி யென்று பலருமே போற்றிவர 94
அக்கினி துரோபதியும ஐவர் பஞ்சபாண்டவர்
மாயவன் அருளால்வண் போர்முடித்தனரே 95
துரியோதனன் சகுனி துச்சாதனன்காணன்
மற்றும் அநேகர் மடிந்தார் போர்க்களத்தில் 96
இலங்கையில் வாழ்பவர்கள் எல்லாரும் அறிய
சாற்றுவேன் சூத நர் காக்க மாண்டாது 97
வஞ்சனையில் துரியன்மடிந்தான் அமர்க்களத்தில்
பொறுத்தார் தருமர் போற்றக் கலியுகத்தில் 98
பழுகாமம் நகரில் தீப் பள்ளய போர்ச் சடங்கு
நடத்தும் முறையை நகரெங்கும் தான் அறியும் 99
துரியோதனன் தம்பி சொல்லுவோம் நூற்றொருவர்
வஞ்சனை சூதால் வண்போரில் மாண்டார்கள் 100
தருமர் தம்பியரும் தையல் துரோபதியும்
பொறுமையுடன் இருந்தார் போற்றக் கலியுகமே 101

காளை அரவானை களம் பெலிகூட்டுவென்று
சொன்னசொல் தட்டாமல் துண்டமாயவெட்டியதே 74
வெட்டி மடித்து விட்டதின் பிற்பாடு
பாரதப் போர் வெல்லப் பயணமென்றூர் அம்மானை 75
அரவானை வெட்டியதை அறிந்ததும்நரககன்னி
புலம்பி அழுதாள் புவனம் கிடுகிடென 76
ஒரு மலையின் மேலிருந்து மறுமலையில் கால் நீட்டி
அம்புகூர் வாங்கிய த அறிந்தரோ மாயவரும் 77
காயாம்பூ நிறந்தோனைக் களம்பெலிகூட்டவென்று
மாயர் எழுதிவிட்டு மறைந்தாரே என் மகனே 78
ஆலிலை மேலபள்ளிகொண்ட ஆதி நெடுமாலின்
எழுதின் படியே எமலோகம் சேர்ந்தாரே 79
அரவனை வெட்டி அங்கு துண்டமாய் போட்டு
போருக்குப் போகப் புறப்பட்டார் ஐவருமே 88
பதினெட்டாம் நாளில் பாரதப்போர் முடித்து
சடங்கின விபரம் சாற்றுவேன் அம்மானை 81
பாசிபதம் பெற்றுவந்து பாரதப்போரை வென்று
வெற்றிச் சங்கூது மிக மகிழ்ச்சியோடு ஐவர் 82
துரியோதனன் உதிரம் தொட்டுத் தலை தடவி
கட்டுவேன் கூந்தல் என்ற கன்னி சபதம் முடித்து 83
துச்சாதனன் பாவி தொட்டுத் துயிலுரிந்த
தோஷத்தைப் போக்க தோகை துரோபதையும் 84
கோவிலில் முன்னில் குறித்து நிலம் அளந்து
ஆழக்குழி வெட்டி அதற்குப் பெலிபூஜை செய்து 85
திரையில் மறைந்து தினகரனைக் காணுமல்
மடுவில் இறங்கி வைப்பார் நெருப்பதிலே 86
காலையில தீமூட்டிக் கடமைகளை முடிதது
மதியம் இறுகும் வரை மனருடிக் காவல் செய்வார் 78

துவர்காயு கத்தில் துரியோதனன் சூதை
கலியுக மக்கள் காட்டுகின்றனர் திக்குழியில் 102

ரண சாரதியும் தங்க நிற அம்பு வில்லும்
கையில் பிடித்துக் கடும்போர் செய்துமடிந்தார்கள் 103

சூதையே நன்மை வெல்லும்சொன்னூர் பெரியோர்கள்
தருமம் ஜெயமாகும் தற்காக்கும் அம்மானை 104

இந்தக் கலியுகத்தில் இருக்கின்ற எல்லோரும்
பொறுமையுடன் இருந்து புவி அரசாண்டிடுவோம் 105

துரோபதியால் குரு நாடு சோரமாய் போனதென்று
ஏட்டில் எழுதி வைத்தார் எல்லோரும் அறிய 106

செழிக்க மழை பொழிந்து செந்நெல் விளைவதும்
கன்னியர்கள் கற்புக் கலங்காமல் வாழ்வதுவும் 107

அரக்கு மாளிகையால் ஐவர் தப்பி வாழ்ந்ததுவும்
அறுத்து விழுந்த கனி அம்மரத்தில் ஒட்டியதும் 108

எடுத்து நான் கூறுகிறேன்
இங்கு மக்கள் போற்றுவதை 109
போற்றுவேன் போற்றி புவனமெங்கும் போற்ற
சாற்றுவேன் உங்குவரும் சகலரும் போற்றிடவே 110
கற்புக்கரசியான கன்னி துரோபதியர்
தீயில் இறங்கித் தீர்த்தார் சபதமுமே 111
குந்தி மைந்தர் ஐவர்களும் கோபாலரும் வாழி
நளாயினி துரோபதியார் நாயகியும் வாழியவே 112
குற்றமிருப்பின் குணத்தையே கையேந்தி
கற்ற பெரியோர் கடமை இது வாழியவே 113
பன்னிரண்டு வருடம் பாலைவனம் கழித்து
வில் வளைத்து மாலையிட்ட விசயனும் வாழியவே 114
கஞ்சனைக் கொன்ற கண்ணனின் தாழ் போற்றி
எழுதினேன் அம்மானை எங்கும் புகழ் விளங்க 115

— சுபம் —

# வாசித்து விட்டீர்களா?

எங்களின் வெளியீடுகளான

# மட்டக்களப்புப் பெருமக்கள் நூல்

## 1. இரும்பரசன்.

இலங்கையில் மட்டுமல்ல இமயம்வரை கடல்கடந்த கடாரம் வரைதன் புஜபல பராக்கிரமத்தால் மட்டக்களப்பின் மாண்பை உயர்த்திய நவீன நீலன் அவர்களின் சரிதம்

—சந்திரா

## 2. புலவர்மணி. பெரியதம்பிப்பிள்ளை.

தமிழறிவார் யாரும் இவரை அறிவார் என்ற அளவில் பரந்த புகழ்கொண்டு தமிழ்ப்பணிசெய்யும் தமிழ்மணியின் வாழ்க்கைவரலாறு

— சான்ஸ்

# ஜீவா பதிப்பகம்

பிரதான பாதை — தேற்றாத்தீவு
களுவாஞ்சிகுடி இலங்கை(கி. மா)

மனோகரா அச்சகம் தேற்றாத்தீவு-

# வாசித்து விட்டீர்களா?

எங்களின் வெளியீடுகளான

## இராமர் அம்மானை
## கஞ்சன் (கதை) அம்மானை

பதிப்பகம்:

# ஜீவா பதிப்பகம்

பிரதான பாதை — தேற்றுத்தீவு

களுவாஞ்சிகுடி இலங்கை(கி.மா)